02-12-1991

# தமிழீழ அரசின் விஸ்தரிப்பின் ஒரு பகுதியே தமிழீழக் காவல்துறை!

தமிழீழ அரசின் குறிப்பிடத்தக்க வளர்ச்சியையே காவல்துறை அமைப்புஎடுத்துக்காட்டுகின்றது. காலப் போக்கில் முறையான முழுமையான அரசு அதிகாரங்கள் பெறுதுபேற்கப்படும். சட்டம், ஒழுங்கு நிலைமையை இதுவரை இயக்கமே நடைமுறைப் படுத்தி வந்தது இது போராட்டத்திற்குச் சுமையாகவும் சில வேளைகளில் சில தப்பபி பிராயங்களை உருவாக்கக்கூடியதாகவும் இருந்தது உடனே ஊடு இலங்கை சில சமூக விரோத சக்திகள் இதனைப் பெரிது படுத்தி மனித உரிமை மீறல்கள் என வெளியுலகுக்குக் காட்டவும் முனைந்தன

★ காவல்துறையில் இயக்கத்திற்கு வெளியே உள்ளோருக்கே வாய்ப்பளிக்கப்படுகின்றது அவர்களுக்கு விசேட பயிற்சியளிக்கப்படும்.

★ தமிழீழ அரசைப் பொறுத்தவரை அதன் அங்கங்கள் படிப்படியாக விஸ்தரிக்கப்பட்டுக் காலப்போக்கில் நிறைவான நிலை உண்டாக்கப்படும்.

★ தமிழீழ அரசு உருவாவதும் இக்காவல்துறை அதன் ஓர் அங்கமே என்பதும் ஸ்ரீலங்கா அரசுக்குத் தெரியும்.

மேற்கண்டவாறு தமிழீழ காவல்துறைபொறுப்பாளர் திரு. நடேசன் விளக்கினார். நேற்றுதமிழீழ காவல்துறை பணிமனை செயற்பாடு, முறைப்பாடு நகரில் ஆரம்பமானது இதனையொட்டி காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றினை நடத்தி விரிவாக விளக்கமளித்தார். இத்தருணம் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கமும் சமூகமளித்திருந்தார்.

— 04ஆம் பக்கம் பார்க்க



பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5 - 00

முரசொலி

முரசு 06 ஒலி 05 பிரசோற்பத்தி கார்த்திகை 16 ( 02 - 12 - 1991 ) திங்கள்

★ மங்கள முனசிங்க கனடா பயணம்

## கனடிய முறையிலான தீர்வு குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு ஆராய்வு

கனடிய வழிமுறையிலான அரசியலமைப்பு இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வாகுமா என்பது குறித்து இன பிரச்சினை தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக்குழு ஆராயவுள்ளதாம். மங்கள முனசிங்க தலைமையிலான இக்குழு எதிர்வரும் 18 ஆம் திகதி மீண்டும் கூடும் போது இது குறித்து ஆராயவுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. கனடாவில் இன, மொழிப்பிரச்சினைகள் எவ்வாறு அரசியலமைப்பு ரீதியில் தீர்த்து வைக்கப்பட்டது. என்பது குறித்து பாராளுமன்ற தெரிவுக்குழு பல மட்டங்களிலும் ஆராய்ந்து வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. இதனிடையே கனடாவின் அரசியலமைப்பு குறித்து நேரடியாகவே ஆராயவென தெரிவுக்குழுவின் தலைவர் மங்கள முனசிங்க கனடா சென்றுள்ளார்.

# அதிருப்திக்குழுவின் கட்சி உதயம்!

# விரைவில் தேர்தல் நடத்த பிரேமா திட்டம்?

## தெற்கு அரசியலில் புதிய அத்தியாயம்

ஐ. தே. கட்சியிலிருந்து பிரிந்து சென்ற லலித் தலைமையிலான அதிருப்தியாளர் குழுவினர் தமது புதிய கட்சியை அமைத்துள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டது. கட்சிக்கு ஐக்கிய தேசிய ஜனநாயக முன்னணி (U.N.D.F) எனப்பெயரிடப்பட்டுள்ளது.

புதிதாக தாம் அமைத்த கட்சியை பதிவு செய்வதற்காக தேர்தல் கமிஷனிடம் இவர்கள் விண்ணப்பித்துவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐ. தே. கட்சியிலிருந்து விலக்கப்பட்ட இந்த எட்டு அதிருப்தியாளர்களும் தாம் கட்சியிலிருந்து விலக்கப்பட்டதை ஆட்சேபித்து கொழும்பு

— 04ஆம் பக்கம் பார்க்க

## சரியான வேளையில் தமிழ்க்கட்சிகளுடன் கலந்து பேசுவேன் - தொண்டமான்

"விடுதலைப்புலிகள் அனுமி... னார். ... புலிகள் அமைப்பு ... சிங்கள எதிர்க்கட்சிகளுடன் கலந்து பேசிவருகிறேன் என

தமிழக எதிர்க்கட்சித் தலைவர் கூறுகிறார்

## காங்கிரஸின் குற்றச்சாட்டை நாகராஜன் உறுதிப்படுத்தினார்

முன்னாள் உள்துறை செயலர் நாகராஜன் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் பற்றிய உண்மை நிலைகளை ஆராய விசாரணைக் குழு வொன்றை அமைக்குமாறு தமிழக எதிர்க்கட்சித் தலைவர் எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தமிழக அரசைக் கேட்டுள்ளார்.

விசாரணைக்குழு அமைக்கு மாறு கூறுகிறும் யோசனை

— 04ஆம் பக்கம் பார்க்க

ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களில் அமுலில் இருந்த ஊரடங்குச் சட்டம் நேற்று காலை முதல் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படை தலைமையகம் அறிவித்தது.

## சபாநாயகர் மீது தாக்கல் செய்த வழக்குத் தீர்ப்பு 4 ஆம் திகதி

ஜனாதிபதிக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து சபாநாயகர் மீது மேல்

பயங்கரவாதத் தடைச் சட்டம் துஷ்பிரயோகம்

## கலந்து பேசுவேன் - தொண்டமான்

''விடுதலைப்புலிகள் அனுப்பிய பதில் கடிதம் தொடர்பாக ஏனைய தமிழ் அரசியல் குழுக்களுடனும் கலந்து பேசுவேன்'' என அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

புலிகள் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட அம்சங்கள் குறித்து சரியான வேளையில் தமிழ்க் கட்சிகளுடன் கலந்து பேசுவேன் தற்போது சிங்கள எதிர்க்கட்சிகளுடன் கலந்து பேசிவருகிறேன் என தொண்டமான் குறிப்பிட்டதாக கொழும்பும் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது

# நாகராஜன் வாக்குமூலத்திற்கு கருணாநிதி மறுப்பு

தமிழகத்தில் விடுதலைப் புலிகள் ஊடுருவ முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியே காரணம் என முன்னாள் தமிழக உள்துறை செயலர் ஆர். நாகராஜன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை திரு. மு கருணாநிதி வன்மையாக மறுத்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்களிடையே இதைத் தெரிவித்த முன்னாள் முதல்வர் கருணாநிதி,' நாகராஜன் மிரட்டலுக்கு பயந்தோ அல்லது சலுகையை எதிர்பார்த்தோ இந்த வாக்குமூலத்தை அளித்துள்ளார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# இந்திய விமானத்தில் வெடிகுண்டு; சென்னையிலிருந்து வந்ததாம்!

நேற்றுக் காலை சென்னையிலிருந்து புதுடில்லி இந்திரா காந்தி விமான நிலையம் வந்த இந்திய பயணிகள் விமானம் ஒன்றில் வெடி குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

லண்டன், நியூயோர்க் ஆகிய இடங்களுக்கு செல்ல இந்த போயிங் 747 விமானம் தயாரானபோது குண்டு விமானத்தின் உணவுப் பெட்டகத்தினுள் இருப்பது அறியப்பட்டது.

விமான சிப்பந்தியொருவர் இக்குண்டை கண்டு எச்சரித்ததையடுத்து விமானம் நிறுத்தப்பட்டு வெடிகுண்டு நிபுணர்கள் அழைக்கப்பட்டு குண்டு அகற்றப்பட்டது.

இப்பயணிகள் விமானம்

— 04 ஆம் பக்கம் பார்க்க

கேட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிராகக்

### பயங்கரவாதத் தடைச் சட்டம் துஷ்பிரயோகம்

# தமிழக அரசின் போக்கிற்கு திராவிடர் கழகம் கண்டனம்

தமிழக அரசு பயங்கரவாத தடைச் சட்டத்தை தவறாகப் பயன்படுத்துவதை கண்டித்து நேற்று திராவிடர் கழகம் கண்டனம் தெரிவித்துள்ளது.

சென்னையில் கூடிய கட்சியின் மத்திய குழு, தமிழக அரசு பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசியல் லாபத்திற்காக பழிவாங்கும் நோக்கில் பாவிப்பதாகக் கண்டனத் தீர்மானம் ஒன்றை வெளியிட்டது.

## படுகாயம்

மட்டக்களப்பில் நடைபெற்ற கடும் மோதல்களின்

— 04 ஆம் பக்கம் பார்க்க

கொண்டுவரப்பட்ட அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை நிராகரிக்கப்பட்டதை ஆட்சேபித்து சபாநாயகர் மீது மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் தீர்ப்பு இம்மாதம் 4 ஆம் திகதி வழங்

—04 ஆம் பக்கம் பார்க்க

## நள்ளிரவு குண்டுவீச்சு

நேற்று நள்ளிரவு வேளையில் அவ்ரோ விமானம் ஒன்று பலாலி முகாமின் சுற்றாடலை நோக்கி பீப்பாக் குண்டுகளை வீசியது: (18)

# மண்டைதீவு, பலாலி படையினர் மாலை கடும் ஷெல் தாக்குதல்

யாழ் குடாநாட்டில் நேற்றும் இரு இடங்களில் கடும் ஷெல் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளன. நேற்று பலாலியிலிருந்து வலிவடக்குப்பகுதிகளை நோக்கி நண்பகல் 12 மணியளவிலும் இரவு 8.40 மணிக்குப்பின்னரும் சுமார் 8 ஷெல் தாக்குதல்கள் குடிமனைகளை நோக்கி படையினரால் நடாத்தப்பட்டன

இவைஏழாலை, கும்பிளான், குரும்பசிட்டி, வசாவிளான்பகுதிகளில் வீழ்ந்து வெடித்ததாக தெரியவருகிறது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

# பௌத்தபிக்குகளிடம் ஆசிபெறும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க

நேற்று முன்தினம் கண்டி சென்ற கூட்டுப்படைகளின் தளபதி ஜெனரல் ஹமில்டன்

—04 ஆம் பக்கம் பார்க்க

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
இலங்கை

## பாவிக்கப்பட்ட பொருட்களின் ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழ் வரும்பொருட்கள் 1991-ம் ஆண்டு டிசம்பர் மாதம்6-ம் திகதி காலை 10 மணியளவில் ஏலத்தில் விற்கப்படும்

| | பொருட்கள் | | தொகை |
|---|---|---|---|
| 1. | பூட்டு | — | 03 |
| 2. | கணக்கு கூட்டும் இயந்திரம் | — | 01 |
| 3. | மின்சார கேத்தில் | — | 03 |
| 4. | சுவர் மணிக்கூடு | — | 01 |
| 5. | போட்டோ பிரதி இயந்திரம் | — | 01 |
| 6. | குளிர்சாதனப் பெட்டி | — | 01 |
| 7. | தண்ணீர் வடிகட்டி | — | 02 |
| 8. | தராசு | — | 01 |
| 9. | புளோ லாம்பு | — | 01 |
| 10. | மர உளி | — | 07 |
| 11. | அலவாங்கு | — | 01 |
| 12. | மின்சார துளை கருவி | — | 01 |
| 13. | மின்சார சோதிணைச் சாவி | — | 08 |
| 14. | இரும்பு அரிவாள் | — | 01 |
| 15. | இரும்பு உளி | — | 02 |
| 16. | சாந்தகப்பை | — | 01 |
| 17. | மண்வெட்டி | — | 05 |
| 18. | பிக்கான் | — | 01 |
| 19. | குறடு | — | 01 |
| 20. | கத்தி | — | 01 |
| 21. | றோக் பிளக் | — | 02 |
| 22. | குப்பை வசரி | — | 01 |
| 23. | புரி ஆழிகள் | — | 13 |
| 24. | கண்ணாடி வெட்டி | — | 03 |
| 25. | தட்டெழுத்து இயந்திரம் | — | 04 |
| 26, | பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் | — | ஒரு தொகுதி |
| 27. | பழுதான கொம்பிகள் | — | ஒரு தொகுதி |
| 28. | பழுதான பேப்பர்கள் | — | ஒரு தொகுதி |
| 29. | சீர் உடை கழிவுத் துணிகள் | — | ஒரு தொகுதி |
| 30, | பழைய புதினப்பத்திரிகைகள் | — | ஒரு தொகுதி |
| 31. | பழைய மரப்பெட்டிகள் | — | ஒரு தொகுதி |
| 32. | [illegible] | — | [illegible] |

ஜனாதிபதி கையூம் பிரேமதாஸாவுக்கு அறிவிப்பு

# சார்க் மாநாடு இம்மாதம் 20 - 30க்குள்

# சகல உறுப்புநாடுகளும் பங்கேற்கும்

சார்க் மாநாடு இம்மாதம் 20 ஆம் திகதிக்கும், 30ஆம் திகதிக்கும் இடையில்நடைபெறுமென இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனை மாலைதீவு ஜனாதிபதியும், இவ்வமைப்பின் தற்போதைய தலைவருமான அப்துல் கையூம் ஸ்ரீலங்கா ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவுக்கு அறிவித்துள்ளார் என்று நேற்று கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

கொழும்பில் நடைபெறவுள்ள இந்த ஒரு நாள் ஆறாவது சார்க் உச்சிமாநாட்டில் கலந்து கொள்ள உறுப்புநாடுகளின் தலைவர்கள் அனைவரும் உறுதியளித்துள்ளனர் என்று கையூம் அறிவித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

மாவீரர் நினைவுப்போட்டி

## பாஷையூர் சென் அந்தனீஸ் வெற்றியீட்டியது

கடற்புலிகளின் அனுசரணையுடன், பாஷையூர் இளைஞர் கழகத்தினரால், மாவீரர்கள் நினைவாக நடாத்தப்பட்ட 'செற்அப்' முறையிலான கரபந்தாட்டப்போட்டியின் இறுதி ஆட்டம், சென் அந்தனீஸ் விளையாட்டரங்கில், கடந்த 25 ஆம் திகதி இடம்பெற்றபொழுது, இதில் பங்குபற்றிய சென் அந்தனீஸ், ஆவரங்கால் அணி, ஆகிய இரு அணிகளும் தலா இரண்டு செற்றுகளில் வெற்றி பெற்றிருந்தபொழுது, வெளிச்சம் போதாமையால் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டது.

இப்போட்டி மீண்டும் 28 ஆம் திகதி பெரும் திரளான ரசிகர்கள் மத்தியில் இடம் பெற்றபொழுது, சென் அந்தனீஸ் அணி 16: 14;, 15: 2, 14; 16. 11: 15;, 13, 3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றியீட்டியது.

தொடக்க முதல் இறுதி வரை எந்த அணி ஜெயிக்கும் என்று கூறமுடியாத வகையில் இரு அணிகளும் வெகு திறமையாக ஆடிய பொழுதிலும் இறுதி 'செற்றில்' சென் அந்தனீஸ் அணி வீரர்கள் மின்னல் வேகத்தின்பந்தை அடித்து எதிர் தரப்பினரை நிலைகுலையச் செய்து 13: 3 என்ற கணக்கில் புள்ளிகளைக் குவித்து முன்னணியில் நிற்கையில், வெளிச்சம் போதாமையால் ஆட்டம் நிறுத்தப்பட்டது. அதன் பின் ஆவரங்கால் அணியின் சம்மதத்துடன் சென் அந்தனீஸ் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டியில் அதி சிறந்த வீரனாக ஆவரங்கால் அணி வீரன் கே. ஜெயநிதியும், சிறந்த வீரனாக சென் அந்தனீஸ் அணி வீரன் டி. டேனியனும், கப்ரின் டீ. ஏ. எம். குணசிங்கம் தலைமையிலான நடுவர்கள் குழுவினால் தெரிவு செய்யப்பட்டனர்.

தீர்ப்பாளராக எஸ். கே. இராசரெட்டினமும், பிரச்சனை தீர்ப்பவராக கே. நாகேந்திரனும் கடமையாற்றினார்கள்

இறுதி விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் எஸ். கிளிபேட் அந்தனிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வீரவேங்கையின் தந்தை ஏபிரகாம் லிங்கன் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார். (16)

சம்மாந்துறை தமிழ் மாணவர்

## வெயிலில் காய்ந்து, மழையில் நனைந்து படிக்கும் பரிதாபம்

தென் தமிழீழத்தின் சம்மாந்துறை கோட்டக்கல்விப் பிரிவிலுள்ள நானமடு கொத்தணிக்குட்பட்ட ஒரேயொரு தமிழ்ப்பாடசாலையான அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் பல குறைபாடுகள் நீண்டகாலமாக நிலவுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

20 அடி அகலமும், 80 அடி நீளமும் கொண்ட ஒரேயொரு வகுப்பறைக் கட்டிடத்தைக் கொண்ட இப்பாடசாலையில் மாணவர்கள் சில வேளையில் வெயிலில் காய்ந்தும், மழையில் நனைந்தும் கற்க வேண்டியுள்ளது.

போதிய தளபாடங்கள் இல்லாமையால் மாணவர்கள் நிலத்திலிருந்தே கற்கவேண்டியுள்ளது. இப்பாரபட்சம் நீக்கப்படவேண்டுமென வற்புறுத்தப்படுகின்றது.

### 'நாடுகளை' அறியுங்கள்

பிரபல எழுத்தாளரும், பாடசாலை அதிபருமான திரு. சு துரைசிங்கம் (துரையர்) எழுதிய 'நாடுகளை அறியுங்கள்' என்ற நூலின் அறிமுக விழா விரைவில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இந்நூலில் 50 உலக நாடுகள் பற்றி பல முக்கிய தகவல்கள் புகைப்படங்களுடன் வெளியிடப்படவுள்ளது ((16)

விமானத் தாக்குதல்கள்

# கண்டபடி முன்னர் போல்

# நிகழாது என்றே கூறினேன்

ஹமில்ரன் வனசிங்க

"விமானத்தாக்குதல்கள் நடாத்தப்படமாட்டாது என நான் கூறவில்லை. முன்னர் குற்றம்சாட்டப்பட்டதுபோல் கண்டபடி விமானத் தாக்குதல்கள் நடாத்தப்படமாட்டாது என்றே கூறினேன்" என ஜெனரல் ஹமில்ரன் வனசிங்க தெரிவித்தார் என்று நேற்று கொழும்பு நாளிதழ் ஒன்று வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கில் நடத்தப்படும் விமானத் தாக்குதல்கள்பற்றி கொழும்பு நாளிதழ் ஒன்றுக்கு சில தினங்களுக்கு முன்தான் அளித்த பேட்டிபற்றியவிளக்கத்திலேயே ஹமில்ரன் வனசிங்க இப்படித் தெரிவித்தாராம்.

இரவில் திருவிளையாடல்

## வெற்று முட்டிகள் கண்டு தொழிலாளர் திகைப்பு

கோப்பாய் பகுதியில் சில இடங்களில் இரவு வேளைகளில் தென்னைகளில் இருந்து ... விக்கப்படுகின்றது.

காலையில் சீவல் தொழிலாளர்கள் ...

## பிறந்தநாள் பரிசு

மாலை ஐந்து மணிக்கே பிறந்தநாள் விழா களை கட்டி விட்டது.

சிறுமி சுலக்ஷனா புஷ்பச்சட்டை அணிந்து அழகுப் ...

| | | | |
|---|---|---|---|
| 31. | பழைய மரப்பெட்டிகள் | — | ஒரு தொகுதி |
| 32 | முறிந்த மரக்கொம்புகள் | — | ஒரு தொகுதி |
| 33. | Staplers | — | 02 |
| 34. | Metronome | — | 02 |
| 35. | Action/Reaction Kit | — | 01 |
| 36. | Squatting Pan | — | 01 |
| 37. | Cistern Handle | — | 04 |
| 38. | Main Switch 20 AMP. | — | 03 |
| 39. | Duplicating Machine | — | 01 |
| 40. | Refrigerator/Deep Freezer | — | 03 |
| 41. | Slide Projector | — | 01 |
| 42. | Stencil Cutting Machine | — | 01 |

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருட்களுக்கான முழுப்பணத்தையும் பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தி அப்பொருட்கள் அனைத்தையும் அன்று மாலை 4 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்தல் வேண்டும்.

மேற்படி பொருட்களை 4-ம், 5-ம் திகதிகளில் மாலை 2 மணி தொடக்கம் 4 மணி வரை யாழ் பல்கலைக்கழக நிதியாளருடன் தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

பதிவாளர்

யாழ் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்,
29. 11. 91

12014

விட்டது.

சிறுமி சுலக்ஷனா புதுச்சட்டை அணிந்து அழகுப் பொம்மை போலக் காட்சியளித்தாள். இது அவளது ஆறாவது பிறந்தநாள்.

விருந்தினர்கள் பரிசுப் பார்சலுடன் வந்த வண்ணம் இருந்தார்கள். விருந்தினர்களை உபசரித்தபடி பம்பரமாகச் சுழன்று கொண்டிருந்தாள் சுலக்ஷனாவின் அம்மா சுமதி.

அவள் பார்வை மேசை மீது வைக்கப்பட்டிருந்த பரிசுப் பார்சல்கள் மேல் அடிக்கடி சென்றது. முகத்தில் பெருமிதம் தவழ எல்லோரையும் உபசரித்தாள்.

விழா முடிந்து இரவுச்சாப்பாட்டின் பின்பு பரிசுப்பார்சல்களைப் பார்வையிட்டுக் கணக்குப் போட்டாள். பின்பு ''கையும் கணக்கும் சரியாக இருக்கு'' என்றாள்.

பேப்பர் படித்துக் கொண்டிருந்த அவள் கணவன் ராஜனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவளைப்பார்த்தான்.

''பலகாரம் செய்ய ஆயிரத்து நூறு செலவு பிறசன்டேஷன் ஆயிரம் பெறும்'' என்றாள். ராஜனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''இது என்ன பேதிட்டே பாட்டியா பிஸ்னெஸ்பாட்டியா? உதுகளை வைச்சுக்கொண்டு வேலையைப் பார்'' என்றான்.

பார்சல்களை மீண்டும் எண்ணிப்பார்த்தவள் ''ஒன்றைக் காணவில்லை'' என்று சொன்ன சுமதி எல்லா இடமும் தேடிப்பார்த்தாள். ஒரு இடமும் இல்லை.

வேலைகள் முடிந்து இரவு படுக்கப்போனபோது காணாமற்போன பரிசுப்பார்சல் சுலக்ஷனாவின் கையில் இருப்பதைப் பார்த்தாள். உடைக்கப்பட்ட அச்சிறுபார்சலை அரவணைத்தபடி உறங்கிக் கொண்டிருந்தாள். பரிசுப் பொருள் என்னவென்று அறியும் ஆவலில் அதைப்பார்த்த சுமதி வியப்பினால் விக்கித்து நின்றாள்.

அது ஒரு லக்ஸ் சோப்! யாரோ லக்ஸ் சோப்பைப் பரிசளித்துள்ளனர்.

வந்த பரிசுகளில் சிறுமி சுலக்ஷனாவுக்குப் பிடித்ததும் அதுவாகவே இருந்தது!.

அபர்ணா

...பகுதியில் சில இடங்களில் இரவு வேளைகளில் தென்னைகளில் இருட்டுத்தனமாக ஏறி கள்ளை எடுத்துச்செல்லும் சம்பவங்கள் கடந்த சில தினங்களாக நிகழ்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

காலையில் சீவல் தொழிலாளர்கள் மரங்களில் ஏறிப் பார்க்கையில் வெற்று முட்டிகளே காணப்படுகின்றனவாம்.


எவர்சில்வர், பித்தளை, பிளாஸ்ரிக், அலுமினியம்
கண்ணாடிப் பாத்திரங்கள் பளிச்செனத் துலங்கிட

நிம்

மில்க்வைற் தரும் மற்றுமோர்
வேம்பின் தயாரிப்பு -
“மில்க்வைற் நிம்”

உள்ளூர் உற்பத்திக்கே ஆதரவு தாருங்கள்

12010

# சிங்கள அரசுகளின் சூழ்ச்சியின் விளைவே

## தமிழ் மண்ணில் இன்று தேசிய எழுச்சிப்போர்!

### டாக்டர் கருணாரத்ன விபரிப்பு

"தமிழ்மண்ணில் தோன்றியுள்ளது தேசிய எழுச்சியாகும். இந்த எழுச்சிக்குக் காரணம் தொடர்ந்து ஆட்சி பீடத்திலிருந்த அரசுகள் கடைப்பிடித்து வந்த இனத்துவேஷச் சூழ்ச்சிக் கொள்கையே" இவ்வாறு நவசமசமாஜக் கட்சிப் பொதுச்செயலாளர் டாக்டர் கருணாரத்ன கூறியுள்ளார்.

"சிங்களவர்களுடன் இணைந்துவாழ்வதா, தனித்து வாழ்வதா என்பதனைத் தமிழ் மக்களே தீர்மானிக்க வேண்டும். தற்போது அங்கு நடைபெறும் போராட்டம் அரசுக்கு எதிரானதே, சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல.

இன்று தமிழ்மக்களால் நடத்தப்படும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் சகல தமிழ்மக்களும் இணைந்துள்ளனர்.

தமிழ்ப்பெண்கள் கூட தமது பிற்போக்கு பழக்க வழக்கங்களை எல்லாம் களைந்து, ஆண்களுடன் இவ் விடுதலைப் போராட்டத்தில் இணைந்துள்ளனர்" என்றும் அவர் மேலும் சொன்னார்.

இந்த எழுச்சிக்குக் காரணம் தொடர்ந்திருந்த அரசுகள் கடைப்பிடித்த இனத்துவேசக் கொள்கையேயாகும். தற்போது நடைபெறும் போராட்டமானது அரசுக்கு எதிரானதே அன்றி சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல.

## அப்பியாசக் கொப்பி இறக்குமதி; பல லட்சரூபா மோசடி!

பாடசாலை அப்பியாசக் கொப்பிகள் இறக்குமதியில் மோசடி நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இவற்றை சுங்கப் பகுதியினூடாக இறக்குமதி செய்த இரு முன்னணி கடதாசி வர்த்தகர்கள் இறக்குமதி வரியாகவும், வியாபார மொத்த விற்பனை வரியாகவும் பல இலட்சம் ரூபாவை அரசுக்குச் செலுத்தாமல் மோசடி செய்திருப்பதாகவும் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார் என்று கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.



## இலட்சியம் மீதான தலைவரின் நம்பிக்கை

"நம்பிக்கை... அதுவே மனித வாழ்வு மேம்பாட்டிற்கான அடிநாதம். ஸ்ரீராமபிரான் இலங்கையைக் கடக்க அணை வேண்டியிருந்தது. ஆனால் அவரது பரமபக்தனான ஹனுமானோ ஒரே தாண்டாகத் தாண்டி விட்டார். அதற்குக் காரணம் நம்பிக்கையே என்கிறார் ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர். அதே போல் சுதந்திர நாட்டுக்காகப் போராடுகின்றார் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன். அவருக்கும், புலம்பெயர்ந்தவர்களுக்கும் தம் இலட்சியத்தில் உள்ள வழுவா நம்பிக்கையை இது காட்டுகின்றது" சென்னை வார இதழ் ஒன்றுக்கு எழுதிய கட்டுரையொன்றில் டாக்டர் எஸ். எம். உதயமூர்த்தி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

### உயர்கல்வி அமைச்சர் சொல்கிறார்

## இணைப்புக் கல்லூரிகள் தேசிய பல்கலைக்கழகங்களைபாதிக்காது

"பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் தேசிய பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியைப்பாதிக்காது" என்று உயர் கல்வியமைச்சர் ஜனாப் ஏ. சி. எஸ். ஹமீத் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் ஒவ்வொன்றும் அந்தந்த கல்லூரிகளின் கற்பிக்கப்படும் கற்கைநெறிகளைக் கொண்டு ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும் என்றார் அவர்.

"வடமாகாணத்தைப் பொறுத்தவரை இது ஒரு பிரச்சினையாக இருக்கலாம். எனினும் இது ஒரு தற்கா லிகமான பிரச்சினையே" என்றும் அவர் கூறினார்.

## கோண்டாவில் கிழக்கில் இரு திருட்டுகள்

நேற்று முன்தினம் இரவு கோண்டாவில் கிழக்குப் பகுதியில் உள்ள 2 கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.

நாவலர் வீதி, மு. இராசலிங்கம் ஆகியோரது கடைகளே உடைக்கப்பட்டு ரொக்கப் பணத்தோடு நல்லெண்ணெய் டொபிகள், தேங்காய் போன்ற பொருள்களும் அத்துடன் ஒரு கடையின் உரிமையாளர் வாங்கி வைத்த நகைகள் பொருள்களும் திருடப்பட்டுள்ளன. (21)

### மாணவர் திறமை

அண்மையில் வெளியாகிய 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகளில் காங்கேசன்துறை, தையிட்டி கணேசா வித்தியாலயமும் முதற்தடவையாக திறமையை வெளிப்படுத்தியுள்ளது.

மிகவும் பின்தங்கியகிராமப் பாடசாலையான தையிட்டி கணேசா வித்தியாலயத்தின் வரலாற்றில் புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்தது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

இப் பாடசாலையின் அதிபரான திரு எஸ். சபாநாதனை பெற்றோர்கள் மிகவும் பாராட்டியுள்ளார்கள். காங்கேசன்துறை கொத்தணிப் பாடசாலைகளில் 6 மாணவர்களே சித்தி அடைந்ததும் குறிப்பிடத்தக்கது. (21)

உடலுக்குள்ளே ஊடுருவிப் பார்க்க உபயோகப்படுத்தும் எக்ஸ்-ரே கருவியை விடப் பல அம்சங்களில் முன்னேற்றமான அதி நவீன கருவிகள் பிறநாடுகளில் உபயோகத்துக்கு வந்து விட்டன. அவற்றினைப் பற்றி விளக்குகிறது இக் கட்டுரை.

## உடலுக்குள்ளே ஊடுருவிப்பார்க்க...

எக்ஸ்-ரேப் படங்கள் இரு பரிமாணப் படங்களாக இருப்பதால், உடலினுள் உறுப்புகளில் தோன்றும் கட்டிகள் முதலியவற்றை முழுமையாகத் தெரிந்து கொள்வது கடினமாக இருந்தது. இதன் முன்னேற்றமாக C.T. ஸ்கான் முறை வந்தது.

வயிற்றுக்குள் கணையம், கல்லீரல்; மார்புக் கூட்டினுள் இதயம், நுரையீரல், நாளமில்லாச் சுரப்பிகள் முதலியவற்றைக் கம்ப்யூட்டர் உதவியின் மூலம், தெளிவாக மேலிருந்து கீழோ, பக்கவாட்டிலிருந்தோ அல்லது குறுக்காகவோ காண C.T.ஸ்கானர் உதவுகிறது. இது முப்பரிமாணப் படம். ஆனால் இதிலும் எக்ஸ் கதிர் வீச்சுக்கள் உபயோகிக்கப்படுவதால், எக்ஸ்ரே உபயோகிப்பதில் உள்ள கெடுதல் இந்தப் பரிசோதனையிலும் உண்டு. கருவுற்றிருக்கும் பெண்கள் எக்ஸ் கதிர் வீச்சுக்கு ஆளானால் வயிற்றுக்குள் இருக்கும் குழந்தையைப் பாதிக்கும்; உடற் குறையுடன் அது பிறக்கச் சாத்தியக்கூறு உண்டு.

இந்த இரண்டு முறைகளிலும் பயன்படுத்தப்படும் எக்ஸ்-ரேக் கதிர்கள், எலும்பு தவிர மற்ற உறுப்புகளின் அமைப்பு பற்றிக் கண்டறிய அதிகம் உதவவில்லை. தவிர எக்ஸ் கதிர்களின் தீய விளைவுகள் காரணமாக, இவற்றை ஓரளவுக்கு மேல் உபயோகப்படுத்த முடியவில்லை. இந்தக் குறையைப் போக்க நுண்ணொலி எனப்படும் அல்ட்ரா சவுண்ட் முறை கண்டுபிடிக்கப்பட்டது.

நுண்ணொலி சத்த அலைகளை டிரான்ஸ்டியூசர் எனும் கருவி உண்டாக்க, அந்த அலைகள் உடலில் உள்ள உறுப்புகளில் வெவ்வேறு அளவுக்குத் திருப்பப்பட்டு, திரும்ப அதே கருவியையே வந்து சேருகிறது. இவற்றைக் கம்ப்யூட்டர் ஆராய்ந்து ஒரு படமாக (தொலைக்காட்சிப் பெட்டியில் இருப்பது போன்ற) திரையில் பிம்பமாகக் காண்பிக்கிறது. கருவுற்றிருக்கும் போது கருவின் தன்மையையும், நிலையையும் கணிக்கவும், கல்லீரலில் உள்ள புற்றுநோய், பித்த நீர்ப்பை, பாதை இவற்றுள் கல், புற்றுநோய் முதலியவற்றையும் காண முடிகிறது. நுண்ணொலி மற்றெல்லாப் பிம்ப முறைகளை விட எளிதில் கிடைக்கக் கூடிய செலவு அதிகமாகாத உடலுக்குக் கெடுதல் செய்யாத ஒரு பிம்ப முறை.

இதையடுத்து நியூக்ளியர் இமேஜிங் எனப்படும் நிழற் பிம்ப முறை சமீப காலத்தில் உருவாகியது. உடலில் ஒவ்வோர் உறுப்பிற்கும் ஒரு ரசாயனப் பொருள் அவசியம். உதாரணமாக தைராய்டு சுரப்பிக்கு அயோடின் உப்பு அவசியம். சில பாஸ்பரஸ் ரசாயனப் பொருள்கள் எலும்புக்குத் தேவை. இந்தப் பொருள்களுடன் ரேடியோ ஆக்டிவிடியைச் சேர்த்து விட்டால் கம்மா காமிராவைக் கொண்டு உடலில் எந்த இடத்திற்கு அந்த ரசாயனம் செல்கிறது எனத் தெரிந்து கொள்ளலாம். அயோடின் தைராய்டிலும் பாஸ்பர உப்புக்கள் எலும்பு அதன் மஜ்ஜை (மாரோ) யிலும் பளிச்சென்று தெரியும். எலும்பினுள் புற்றுநோய் இருந்தால் இருக்கும் இடத்தில் இந்த உப்பு அதிகம் சேர்ந்து படத்தில் நன்றாகத் தெரியும். கம்ப்யூட்டர் உதவியுடன் கம்மா காமிரா மூலம் எடுக்கப்படும் இந்தப் படங்களை டேப்புகளில் சேகரித்து (டெலிவிஷன் போன்ற) திரையிலும் காண முடியும்.

அணுவினுள் புரோட்டான், நியூட்ரான் போன்ற நுண் அணுக்கள் சுற்றிக்கொண்டே இருக்கின்றன. ஒரு வலுவான காந்தம் மூலம் இவற்றைத் திசை திருப்பி அணிவகுத்து நிறுத்த முடியும். இதற்கு ரேடியோக் கதிர்கள் உபயோகிக்கப்படுகின்றன. இந்த ரேடியோக் கதிர்கள் நீக்கப்படும் நேரத்தில், மின் காந்த அலைகள் வெளிப்படுகின்றன. கம்ப்யூட்டர் மூலம் இவற்றைக் கணிக்க முடியும். இதுதான் மாகனடிக் ரிசோனன்ஸ் இமேஜிங் முறை. திசுக்களில் எவ்வளவு ஹைட்ரஜன் புரோட்டான் இருக்கிறது என்று அளந்து முப்பரிமாணப் படங்களாக எடுத்துக் காண்பிக்க கம்ப்யூட்டர் உதவுகிறது. வியாதியுள்ள திசுக்கள், கட்டி மற்றும் புற்றுநோய் மாற்றங்கள் இவை எல்லாவற்றையும் இவை எடுத்துக் காட்டுகின்

## ரயில் பாதை விஸ்தரிப்புக்கு 300 கோடிரூபா நிதி

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான புகையிரதப் பாதை விஸ்தரிப்பு ரயில் பாதை போடப்படும். அதன் பின்னர் தங்காலை அம்பாந்தோட்டை, கதிர்கா

### கண்டியில்

## தமிழ் வித்தியாலயம்; அரசியல் பின்னணியால் பின்னடைப்பு

## தமிழ் வித்தியாலயம்; அரசியல் பின்னணியால் பின்னடிப்பு

கண்டியில் ஒரு தமிழ் மகா வித்தியாலயம் அமைப்பதற்கான முயற்சிகள் பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் இதுவரை அது நிறைவேற்றப்படாததற்கு அரசியல் பின்னணியே காரணமாக உள்ளது என தமிழ்ப் பெற்றோர் சுட்டிக் காட்டுகின்றனர்.

கண்டி நகரைச் சுற்றி ஆயிரக்கணக்கான தமிழ் மாணவர்கள் இருந்து வருவது பற்றியும் தெரிவிக்கப்படுகின்றது.

மாத்தறையிலிருந்து கதிர்காமம் வரையிலான புகையிரதப் பாதை விஸ்தரிப்பு வேலைகள் டிசம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

முதலில் மாத்தறையிலிருந்து 14 மைல்கள் தூரமான டிக்வலை வரை இந்த ரயில் பாதை போடப்படும். அதன் பின்னர் தங்காலை, அம்பாந்தோட்டை, கதிர்காமம் வரை விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதற்கென சுமார் 300 கோடிரூபா செலவாகும் எனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (08)

ரஜன் புரோட்டான் இருக்கிறது என்று அளந்து முப்பரிமாணப் படங்களாக எடுத்துக் காண்பிக்க கம்ப்யூட்டர் உதவுகிறது. வியாதியுள்ள திசுக்கள், கட்டி மற்றும் புற்றுநோய் மாற்றங்கள் இவை எல்லாவற்றையும் இவை எடுத்துக் காட்டுகின்றன.

எக்ஸ் கதிர் வீச்சுக்கள் உடலுக்குத் தீங்கு செய்வது போல எம்.ஆர்.ஐ.களைனரால் உடலுக்குத் தீங்கு விளையாது. ஆனால் ஸி.டி. ஸ்கானரைப் போல, ஐந்து, ஆறு மடங்கு இதற்குச் செலவாகும்.

விளக்கம்: டொக்டர் எம்.எஸ்.வெங்கட்ராமன்.

நன்றி: கல்கி

## நோர்வே கண்டுபிடிப்பு
## செயற்கைக் கோள் செலவு சுருக்க வழி

செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தத் தற்போது 50 மில்லியன் பௌண் முதல் 100 மில்லியன் பௌண்ட் வரை செலவாகிறது. சிறிய ராக்கெட் சிறிய செயற்கைக் கோள் என்ற அளவில் இதைச் சுருக்கி பத்தே மில்லியன் பௌண்ட் (இலங்கை நாணய மதிப்புப்படி 63 கோடி ரூபா) செலவில் பூமியின் சுற்றுப் பாதைக்கு சிறிய செயற்கைக் கோள்களைச் செலுத்த நோர்வே சில வெற்றிகரமான வழிமுறைகளை ஆராய்ச்சியின் பயனாகக் கண்டறிந்துள்ளது. நோர்வேயில் உள்ள அண்டேயா என்ற இடத்தில் இருந்து இன்னும் சில மாதங்களில் இப்படிப்பட்ட உலகின் முதல் சிறிய செயற்கைக்கோள் விண்வெளிக்கு செலுத்தப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (16)


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

எண்ணெய்க் குளிப்புக்கு இயற்கை வளங்கள் கொண்டு தயாரிக்கப்பட்டது, ''ஒலிவ்'' ஸநானத் தூள் கண்ணுக்குக் குளிர்ச்சி, கூந்தலுக்கு வளர்ச்சி 40 கிறாம் பக்கற் விலை ரூபா 3/- மட்டுமே எங்கும் கிடைக்கிறது.
மில்க்வைற் 12009

### விற்பனைக்கு

உயர்தர நத்தார் - புதுவருடவாழ்த்து மடல்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு சஞ்சிற் இல. 16 மாட்டின் வேன், கொன்வென்ற் றோட், யாழ்ப்பாணம். 12005


## மயான சிரமைப்பு

சுன்னாகம்- கொத்தியாலடி மயானச் சிரமைப்புப் பணியில் சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் ஈடுபட்டனர்.

## மீளாய்வு

வலி-வடக்கு உதவி அரசாங்கஅதிபர் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி வாழும் பொதுமக்கள் தமது உலர் உணவு அட்டைகளை மீளவும் தாம் தங்கியிருக்கும் பகுதி கிராம சேவையாளர்களிடம் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளார்கள்.

உலர் உணவு அட்டைகளை பதியும் வேலைகள் தற்போது நடைபெற்று வருவதாக தெரிய வந்துள்ளது. (21)

## சியோல் சாதனை; ஸ்பெயின் விடுக்கும் சவால்

உலகிலேயே அதிக நாடுகளும். அதிகமான விளையாட்டு வீரர்களும் கலந்துகொண்ட சர்வதேசப் போட்டியாக சியோலில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியை கின்னஸ் புத்தகத்தில் தற்போது சேர்த்துள்ளனர். 1988 இல் இங்கு நடந்த போட்டியில் 160 நாடுகளைச் சேர்ந்த 9302 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றார்கள் என்பதுதான் அந்தச் சாதனை. இந்தச் சாதனை 1992-ம் ஆண்டில் ஸ்பெயினில்' உள்ள 'பார்சிலோனா' நகரில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியின் போது நிச்சயமாக முறியடிக்கப்படும் என்று ஸ்பெயின் தெரிவித்துள்ளது. மேலும் ஸ்பெயினைச் சேர்ந்த கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்த 500-வது ஆண்டு நிறைவு விழாவும் 1992-ல் ஸ்பெயினில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (16)

# லிபியாமீது விமானத் தாக்குதல்களை நடத்த பிரிட்டிஷ், அமெரிக்க விமானங்கள் முஸ்தீபு!

பிரிட்டிஷ் விமானப்படைத் தளத்திலுள்ள பல பிரிட்டிஷ், அமெரிக்க போர் விமானங்களும் குண்டுவீச்சு விமானங்களும் ஸ்கொட்லாந்திற்கு வடக்கே உள்ள ஓர் அனாதரவான தீவில் யுத்தப் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனவாம்.

இத்தகவலை வெளியிட்டுள்ள பிரிட்டிஷ் பத்திரிகை ஒன்று இப்பயிற்சி அநேகமாக லிபியா மீது விமானத் தாக்குதல் நடாத்துவதற்கான முன்னேற்பாடாக இருக்கலாம் எனக் குறிப்பிட்டுள்ளது. இவ்வாறு லிபியா மீது திடீரெனத் தாக்குதல் நடாத்தத் திட்டமிட்டதற்கு காரணம், நான்கு வருடங்களுக்கு முன்னர் அமெரிக்க பான்ஆம் பயணிகள் விமானத்தைக் குண்டு வைத்து தகர்த்தது லிபியா என ஊர்ஜிதமாகியதே காரணம் என அப்பத்திரிகை கூறுகிறது.

நான்கு வருடங்களுக்கு முன் அமெரிக்க போயிங் பயணிகள் விமானம் ஒன்று பிரிட்டனின் லொக்கபி பகுதிக்கு மேலாக பறந்து கொண்டிருந்தபோது வெடிகுண்டு வெடிப்பில் நடுவானிலேயே சிதறியது. இதனால் 250 க்கு மேற்பட்ட அமெரிக்க பயணிகள் பலியாகினர். இதற்கு லிபியாவே காரணம் என அமெரிக்காவும் பிரிட்டனும் குற்றஞ்சாட்டி வந்தன. லிபியா தாக்குதலுக்குத் தாம் காரணமல்ல என மறுத்து வந்தது.

தற்போது இக் குண்டு வெடிப்புக்கு லிபியாவே காரணம் எனவும் லிபியா மீது முன்னர் அமெரிக்க விமானப் படை தாக்குதலுக்கு பழி வாங்கவே லிபியா அமெரிக்க பயணிகள் விமானத்தைத் தகர்த்தது எனவும் தெரிய வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## மண்ணெண்ணெய் எடுத்துவர முல்லை. வியாபாரிகள் பின்னடிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அதிகாரம் பெற்ற விற்பனையாளர்கள் மூலம் மண்ணெண்ணெய் எடுத்து செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது

வாரத்தில் ஒரு லோட் மண்ணெண்ணெய் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்பட்ட போதிலும் மண்ணெண்ணெய்யை எடுத்து வர போதிய பாதுகாப்பு இல்லாததால் மண்ணெண்ணெய் எடுத்து வர விற்பனையாளர்கள் பின்நிற்பதாகக் கூறப்படுகிறது (08

## ஓவியக் கலைஞர்களுக்கு

எம் தாயகத்தின் அவலங்களையும், நெருக்கடிகளுக்கு மத்தியிலும் நாம் நிமிர்ந்து நிற்கும் அழகையும் எமது போராட்டத்தின் உறுதியையும் உலகெங்கும் எடுத்துச் சென்று உணர்த்தக்கூடிய ஓவியங்களை எமது ஓவியர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளும் நோக்குடன் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத் தலைமைச் செயலகத்தில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது

## வவுனியாவில் இப்படி நடக்கிறது

## டைனமோவிற்கு தடை பிரயாணிகள் மீது தாக்குதல்

வவுனியா நகரில் சைக்கிளில் இரவில் வெளிச்சம் இன்றி பிரயாணம் செய்பவர்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை அப்பகுதியில் பற்றரிகள், டைனமோக்கள், லைட்டுக்கள் எடுத்து வரவும் விற்பனை செய்யவும் இராணுவம் தடைவிதிக்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் அப்பகுதி சைக்கிள் பயணிகள் செய்வதறியாது பொலிஸாரின் தாக்குதலுக்கு அடிக்கடி உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். 08

## புகையிரதப் பகுதி: அரச வங்கிகள் மக்கள் மயப்படுத்த எண்ணமில்லை

இலங்கை வங்கி, மக்கள் வங்கி, புகையிரதப்பகுதி இவற்றை மக்கள் மயப்படுத்துதல அல்லது தனியார் வசம் கையளித்தல என்ற எண்ணம் அரசுக்கு இல்லை.

இவ்வாறு பிரதம மந்திரி டி.பி.விஜயதுங்க பாராளுமன்றத்தில தெரிவித்தார். அவர் மேலும் பேசும் போது, இந்த நிறுவனங்களை புனரமைத்து நிர்வாகம் திறம்படச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க அரசு தீர்மானித்திருப்பதாகவும் கூறினார்.

எமது அரசின் இந்த திட்டத்தை அரசுக்கு எதிரானவர்கள் மக்களிடையே தவறாகப் பிரச்சாரம் செய்து அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படுத்த முனைகின்றார்கள் என்றும் தெரிவித்தார்.

## போதனா வைத்தியசாலைகள் மாநாடு; யாழ் குழுவினர் நேற்று புறப்பட்டனர்

கொழும்பிலுள்ள சுகாதார மகளிர் விவகார அமைச்சில் இலங்கையிலுள்ள மூன்று போதனா வைத்தியசாலைகளைச் சேர்ந்த பணியாளர்களும் நிர்வாக அதிகாரிகளும் பங்கு பற்றும் உயர்மட்ட மாநாடு இன்று கொழும்பில் நடைபெறுகிறது.

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம போதனா வைத்தியசாலைகளைச் சேர்ந்த தாதிக் குழுவினர்களே இம் மாநாட்டில பங்குபற்றவுள்ளனர். விசேட மாநாட்டில் பங்கு பற்றுவதற்காகயாழ்போதனா வைத்தியசாலையிலிருந்து நால்வர் கொண்ட குழு நேற்று நண்பகல் பலாலியிலிருந்து விசேட விமான மூலம் புறப்பட்டுச் சென்றது.

இக்குழுவில் பணிப்பாளர் செல்வி நவமலர் கனகரட்ணம், வைத்திய கலாநிதி சிவக்குமாரன் வைத்திய அதிகாரி ரவிராஜ், நிர்வாகச் செயலாளர் ஏ. பத்மநாதன் ஆகியோரே இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

யாழ் போதனா வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள சகல தரத்திலான ஊழியர் பற்றாக்குறை, நற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குதல் மற்றும் அங்கு நிலவும் சகலபற்றாக்குறைகள் பற்றியும்வைத்தியசாலையின்தேவைகள் பற்றியும் மாநாட்டில் இவர்கள் எடுத்துரைப்பார்கள். (07)

## தூக்கிலிடினும் உரிமைக்கு போராடுவேன என்கிறார் பெனாசிர்

எனது தொகுதியிலுள்ள ஆதரவாளர்கள் நூற்றுக்கணக்கில் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வருகிறார்கள் என்னையும் கைது செய்யக்கூடும் நான் மரணத்துக்கு அஞ்சாதவள் இவர்களால் என்னைத் தூக்கிலிட முடியுமே தவிர எனது வாயை அடக்கிவிட முடியாது நான் எப்போதும் உண்மையையே வெளிப்படுத்தி வருவேன் என்று பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் திருமதி பெனாசிர் பூட்டோ கருத்து வெளியிட்டுள்ளார். அவர் தொடர்ந்து கூறுகையில் தமது கட்சியினர் 2000க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஜனநாயகத்தை காப்பற்ற தாம் தொடர்ந்து பாடுபடப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

## தமிழீழ......

திரு. நடேசன் அளித்த விளக்கம் வருமாறு:-

★ விரைவில் குடாநாட்டிற்கு வெளியேயும் வன்னிக்கும் காவல்துறை விஸ்தரிக்கப்படவுள்ளது. குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்குமான இத்தகைய பணிமனைகள் விரைவில் அமைக்கப்படும்.

★ குற்றங்கள் உருவாகாது தடுப்பதே இத்துறையின் அடிப்படை நோக்காக இருக்கும் குற்றங்கள் வந்தபின் தடுக்க முனைவதிலும் பார்க்க குற்றங்கள் உருவாகக் கூடிய காரணிகளைக் கண்டறிந்து தவிர்க்க காவல்துறையினர் சமூகத்தின் அடித்தளம் வரை சென்று செயற்படுவர்.

★ கட்சி சாராது, பக்கம் சாராது, சாதி, சமயத்துக்கு அப்பாற்பட்டு நீதியின் அடிப்படையில் செயற்பாடு அமையும்.

★ கைதானோரை விசாரணை செய்வதனைப்பொறுத்தவரையில் விரைவில் நீதிமன்றம் உருவாக்கப்படும்.

★ வழமையான பொலிஸ் முறைக்கும், இந்தக் காவல் துறைக்கும் இடையே புரட்சிகர மாற்றத்துடனான வித்தியாசம் உண்டு சமூகத்தின்

ஊதியத்தில் ஒருபகுதி அவரது குடும்பத்திற்கும் கிடைக்க ஒழுங்கு செய்யப்படும்.

★ குற்றமிழைத்தவர் மீண்டும் குற்றமிழைக்காது சமூகத்திற்கு விசுவாசமாகவும், போராட்டத்திற்கு விசுவாசமாகவும் செயற்பட்டு புதிய மனிதராக மாற்றப்படும் சூழ்நிலை தோற்றுவிக்கப்படும்

★ விசேட கடமைக்கென காவல்துறையின் பணி தேவைப்பட்டால் முன்னதாக விண்ணப்பித்தால் பாதுகாப்புக் கடமை ஒழுங்கு செய்யப்படும்

★ காவல்துறையினரின் வேதனத்தைப் பொறுத்தவரை இயக்கத்தின் உப-

## பாளையடிவெட்டை படையினர் பொதுமக்கள் மீது தாக்குதல்

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பில் பொதுமக்களை படையினர் கைது செய்வது அதிகரித்து வருகிறது.

நேற்று முன்தினம் பாளையடிவெட்டை இராணுவ முகாமிலிருந்து புறப்பட்ட படையினரும் சமூக விரோதக் கும்பலொன்றும் காக்காச்சிவெட்டை கிராமத்தை சுற்றி வளைத்தது.

இங்கு 22 பொதுமக்கள் கைது செய்யப்பட்டு படையினரால் சித்திரவதை செய்யப்பட்டனர். பின்னர் இவர்களில் மூவர் முகாமுக்கு இழுத்துச் செல்லப்பட்டனர் இவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

## அதிருப்திக்கு...

உயர் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த மனு மீதான தீர்ப்பு நாளை வெளியிடப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

வழக்கில் இவர்கள் தோற்கும் நிலையே அதிகமாக இருப்பதாகவும் இதனால் என்மரும் தமது கட்சி உறுப்பினர் பதவி, பாராளுமன்ற

## சுவிஸ் எல்லையிலிருந்து

## நோர்வே புக முயன்ற 13 இலங்கைத் தமிழர் கைது

சுவிஸ் எல்லையிலிருந்து நோர்வேக்குள் புக முயன்ற 13 இலங்கைத் தமிழர்கள் பொலிசாரினால் கடந்த செவ்வாய் அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை நோர்வேக்கு அழைத்துச் செல்வதற்கென டென் மார்க்கிலிருந்து வந்த தமிழ் இளைஞர் ஒருவரும் இவர்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் எல்லையைக் கடக்க முயன்ற போது பொலி

கடத்தல் சம்பந்தமாக 5 கிழமை சிறைத் தண்டனை அனுபவித்தவரானார்

பொலிசாரினால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கும் ஏனைய இளைஞர்கள் நோர்வேக்கு அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர் இவர்கள் தலா 3½ இலட்சம் ரூபா ஏஜென்சிக்குக் கொடுத்துள்ளதாகத் தகவல் வெளியிட்டுள்ளனர்

இவர்களில் ஒருசிலர் இந்த ஒக்டோபர் மாதமே இலங்கையை விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## கிளிநொச்சியில சிந்து பாகு வெல்லம்

பனம்பாலுடன் சீனியும் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்படும் சிந்து பால் வெல்லம் தயாரிப்பதில் கிளிநொச்சியில் கிராமிய உற்பத்திக்குழு ஈடுபட்டுள்ளது. நாளொன்றிற்கு சராசரி ஐம்பது லீற்றர்பாலில் தயாரிக்கப்படும் சிந்து பால் வெல்லம் விற்பனைக்கு விடப்படுகின்றது சிறுவர்களுக்கு ஒரு சத்துணவாக அமையும் சிந்து பால் வெல்லத்திற்கு இப்பகுதியில் நல்ல வரவேற்பும் இருப்பதாகத் தெரிய வருகின்றது

★ கைதானோரை விசாரணை செய்வதனைப் பொறுத்தவரையில் விரைவில் நீதிமன்றம் உருவாக்கப்படும்.

★ வழமையான பொலிஸ் முறைக்கும், இந்தக் காவல் துறைக்கும் இடையே புரட்சிகர மாற்றத்துடனான வித்தியாசம் உண்டு. சமூகத்தின் அடித்தளம் வரை சென்று குற்றம் விளைவதற்கான காரணத்தைக் கண்டறிந்து தடுப்பதே எமது வேலைத்திட்டமாகும்.

★ போக்குவரத்து விதிகளை மீறுவோருக்கு அருகிலுள்ள ஸ்தாபனங்களில் விளக்க வகுப்புகளில் அறிவுறுத்தல் கொடுக்கப்படும். நகரப்பாடசாலைகளில் இதுபற்றி விளக்கமளிக்கப்பட்டுள்ளது. இது கிராமப்புறப்பாடசாலைகளுக்கும் விஸ்தரிக்கப்படும். அரசு நிறுவனங்கள் மற்றும் அலுவலகங்களுக்கும் விளக்கமளிக்கப்படும். ஒரு கைநூலை வெளியிடவும் தீர்மானித்துள்ளோம். சட்டங்கள் யுத்த காலத்தைப் பொறுத்து வரையறுக்கப்படும்

★ கிரிமினல் குற்றங்களைப் பொறுத்த வரை தண்டனை வழங்குவதனை நீதிமன்றமே தீர்க்கும். தண்டனை விதிக்கப்படும் பட்சத்தில் சம்பந்தப்படுபவரின் உடலுழைப்பு சமூக நலத்திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டு அவரது

★ விசேட கடமைக்கென காவல்துறையின் பணி தேவைப்பட்டால் முன்னதாக விண்ணப்பித்தால் பாதுகாப்புக் கடமை ஒழுங்கு செய்யப்படும்

★ காவல்துறையினரின் வேதனத்தைப் பொறுத்தவரை இயக்கத்தின் உப-அமைப்பாக இது வரையறுக்கப்பட்டுள்ளதால் காலப்போக்கில் தானாகவே நிதி வசதியைப் பெற்றுக் கொள்ளும் வகையில் வகுக்கப்படும்

★ பலாத்காரத்தை குற்றமிழைப்பவரிடம் பிரயோகிக்க வேண்டிய அவசியம் எழாது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு ஏனெனில் தற்போதைய விடுதலைப் போராட்டம் நல்லதொரு சமூகவளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குற்றம் விளைந்த சுற்றாடல், சுற்றாடல் சூழலை அறிய முயற்சி மேற்கொள்ளப்படும்.

★ பெண் பொலிஸாரும் இணைந்து செயற்படுவர்.

★ பொது சமாதானத்தைப் பாதிக்கும் எவ்வன்மை முயற்சியையும் முறியடிப்பதற்காக நிகழக்கூடிய குற்றசம்பவங்களில் நீதி நிலைநாட்டப்பட காவல்துறை தலையிடும்

★ அபராதம் விதிப்பதைப் பொறுத்தவரையில் மக்களின் பொருளாதார சுமை, வாழ்வியல் நிலைக்கேற்பவே செயற்பாடு இருக்கும்

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி "லக்ஷ்மி பில்டிங்"இல் உள்ள அச்சகத்தில் 02 12. 1991இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பித்த மனு மீதான தீர்ப்பு நாளை வெளியிடப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

வழக்கில் இவர்கள் தோற்கும் நிலையே அதிகமாக இருப்பதாகவும் இதனால் எண்மரும் தமது கட்சி உறுப்பினர் பதவி, பாராளுமன்ற அங்கத்தினர் பதவிகளை இழக்கலாம் எனவும் சுட்டிக் காட்டப்படுகிறது.

இதனால் தமது அரசியல் எதிர்காலத்தை உறுதியாக்கும் பொருட்டு இவர் புதிய கட்சியை உருவாக்கியுள்ளதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

## பொதுத்தேர்தல்?

இதேவேளை தமக்கு எதிரான அரசியல் குற்ற பிரேரணையில் கையெழுத்திட்ட 45எம் பிகளையும்தொடர்ந்து வைத்துக் கொண்டு அரசு நடாத்துவது ஆபத்தானது என ஜனாதிபதி பிரேமதாஸ கருதுவதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

இதனால் விரைவில் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத்தேர்தலை நடத்துவதன்மூலம் புதிதாக தமக்கு விசுவாசமான எம். பிகளை அரசதரப்பில் சேர்த்துக் கொள்வதோடு எதிர்க்கட்சிகள் தேர்தலை சந்திக்க அவகாசம் எடுக்கமுடியாதவாறு விரைவில் தேர்தலை நடாத்த ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் கொழும்பில் செய்தியாளர்கள் கருதுவதாக ஏஜென்ஸி செய்திகள் சுட்டிக்காட்டின.

இவர்களை நோர்வேக்கு அழைத்துச் செல்வதற்கென டென்மார்க்கிலிருந்து வந்த தமிழ் இளைஞர் ஒருவரும் இவர்களுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவர்கள் ஒரு மோட்டார் வாகனத்தில் எல்லையைக் கடக்க முயன்ற போது பொலிசாரினால் துரத்திப்பிடிக்கப்பட்டதாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்த வாகனத்தை ஓட்டிய 26வயதுடைய இலங்கை தமிழ் இளைஞர் இதற்கு முன் கள்ளக்

## நாகராஜன்...

தி. மு க. அரசு வெளிப்படையாகவே செயற்பட்டது.

அ. தி. மு க. அரசு வேண்டுமென்றே பத்மநாபா கொலை வழக்கில் எம்மை சிக்கவைத்து அரசியல் லாபம் தேடுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தையும் தவறாக தமிழக அரசு பயன்படுத்துகிறது'' என்றார்,

தி மு. க அரசின் நடவடிக்கைகள் குறித்து ஆராய தமிழக அரசு உயர் நீதிபதிகள் விசாரணைக் குழுவை அமைத்து விசாரணை நடாத்தலாமே எனவும் கருணாநிதி அங்கே குறிப்பிட்டார்

## பௌத்த...

வனசிங்க அங்கு பௌத்த மதத்தலைவர்களின் ஆசியைப் பெற்றாராம். மல்வத்தை பீட. அஸ்கிரிய பீடங்களின் தலைவர்களையும் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க சந்தித்து உரையாடியதாக தெரிவிக்கப்படுகிறது.

நோர்வேக்கு அரசியல் தஞ்சம் கோரியுள்ளனர். இவர்கள் தலா 3½ இலட்சம் ரூபா ஏஜென்சிக்குக் கொடுத்துள்ளதாகத் தகவல் வெளியிட்டுள்ளனர்

இவர்களில் ஒருசிலர் இந்த ஒக்டோபர் மாதமே இலங்கையை விட்டுச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## இந்திய...

நேற்றுக்காலை வழமைக்கு மாறாக சில நிமிட நேரம் கழித்தே சென்னையிலிருந்து புதுடில்லி வந்து சேர்ந்ததாக விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்,

## மண்டைதீவு...

நேற்று மாலை 6 மணியிலிருந்து இரவு 8 மணிவரையில் அரியாலைகிழக்குப்பகுதியான பூம்புகார், நாவலடி ஆகிய இடங்களை நோக்கி மண்டைதீவிலிருந்து படையினர்சுமார் பத்திற்கு மேற்பட்ட ஷெல்களை ஏவினர்.

அண்மையில் அப்பகுதிகளில் விமானக் குண்டுவீச்சுச் சம்பவத்தினையடுத்து பாதுகாப்பு தேடி வேறு இடங்களுக்குச் சென்றுவிட்டதனால் பெருமளவு மக்கள் உயிராபத்தின்றி தப்பியுள்ளனர் (07)

## படுகாயம்...

போது புலிகளின் பொறிவெடியில் சிக்கிய ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரியொருவர் படுகாயமடைந்துள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

சராசரி ஐம்பது லீற்றர் பாலில் தயாரிக்கப்படும் சிந்து பால் வெல்லம் விற்பனைக்கு விடப்படுகின்றது சிறுவர்களுக்கு ஒரு சத்துணவாக அமையும் சிந்து பால் வெல்லத்திற்கு இப்பகுதியில் நல்ல வரவேற்பும் இருப்பதாகத் தெரிய வருகின்றது

## இன்று 40 பேர் விடுதலை

பல்வேறு காரணங்களுக்காக விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்ட 40 பேர் இன்று காலை கோண்டாவிலில் வைத்து விடுவிக்கப்படுகின்றனர்.

## காங்கிரஸின்...

யாரையும் பழிவாங்கும் நோக்கிலானதல்ல எனக் குறிப்பிட்ட அவர், நாகராஜன் அளித்த வாக்கு மூலம் இதுவரை காங்கிரஸ் கட்சி முன்னாள் தமிழக அரசு குறித்து கூறிவந்ததை உறுதிப்படுத்தியுள்ளது என்றார்.

## சபாநாயகர்...

கப்படவிருக்கிறது.

இந்த வழக்கை தர்மசேன தோமஸ் சபாநாயகருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கு திரு தோமஸ் முன்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு நிராகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.